சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையைக்
குறித்த நூற்றாண்டு நிறைவு விழா 1897 - 1997

# சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வருகையும் மறுமலர்ச்சியும்

மத்திய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

இ. ராஜாமகேந்திரசிங்கம்
MAAT, ACEA (Lond)

வெளியீடு:
விவேகானந்தர் அன்பர்கள்
திருநெல்வேலி

476.P

954.

சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையைக்

குறித்த நூற்றாண்டு நிறைவு விழா 1897 - 1997

# சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வருகையும் மறுமலர்ச்சியும்

பொது சன நூலகம்
31 JAN 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

இ. ராஜாமகேந்திரசிங்கம்
MAAT, ACEA (Lond)

வெளியீடு:
விவேகானந்தர் அன்பர்கள்
திருநெல்வேலி

முல்லை அச்சகம்,
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அணிந்துரை

*பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்*

தலைவர், இந்து நாகரிகத்துறை

சுவாமி விவேகானந்தர் ஒரு யுக புருஷர் ஆவார் தமது குருநாதராகிய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் வழிகாட்டலில் உருவாகிய அம்மேதை தமது தாய் நாட்டிற்கு மாத்திரமன்றி இந்துப்பாரம்பரியத்திற்கும் பெருமையையும் புகழையும் தேடித்தந்தார். நிறை மனிதனாகத் திகழ்ந்த அவர் மனித முன்னேற்றத்திற்கும் சமூக மேம்பாட்டிற்குமென கூறிய ஆணித்தரமான கருத்துக்கள் அன்று போல இன்றும் பொருத்தமாக இருப்பதே அவரது தீர்க்கதரிசனத்திற்கு சிறந்த உரைகல். அன்பும், அறிவும், ஆன்மீக பலமும் வீரமும் ஆற்றலும் வேகமும் கொண்ட ஆளுமை மிக்க மனிதனாகத் திகழ்ந்த விவேகானந்தர் மனிதநேயத்திற்கு உரிய மதிப்பினை வழங்கியவர். அவரது சிந்தனைகளும் ஆழமான உறுதியான சொற்பொழிவுகளும் இன்றும் அனைவராலும் விரும்பப்படுகின்றன இவையாவும் மேற்குலகிலும் இந்தியாவிலும் இலங்கையிலும் அவர் மேற்கொண்ட ஆத்மீகப் பயணங்களின் போது வெளிப்படுத்தப்பட்டவை.

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு வருகை தந்த நூற்றாண்டு விழாவைக் (1897 - 1997) குறிக்குமுகமாக திருநெல்வேலியைச் சார்ந்த சுவாமி விவேகானந்தரது அபிமானிகள் திருநெல்வேலி ஸ்ரீ இராமகிருஷ்ணாலயத்தில் நிகழும் வைபவத்தில் இச்சிறுநூலை மனமுவந்து அம்மேதை ஆற்றிய அரும்

பெரும் பணிகளுக்குரிய நன்றிக்கடனாக அவரது ஆதார விந்தங்களில் காணிக்கையாக அர்ப்பணிக்கின்றனர். உலகம் போற்றும் அவ்வுத்தமரை நாமும் போற்றிப் பெருமைபடத்தக்க வகையில் இந்நூல் வெளியிடப்படுகின்றமை வரவேற்கத்தக்கதொரு முயற்சியாகும்.

ஆசிரியர் இந்நூலில் சுவாமியின் சிகாகோ பிரசங்கம் இலங்கையில், சிறப்பாக 1897ல் அவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தமை, அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், அவரது வருகையினால் ஏற்பட்ட மறுமலர்ச்சி ஆகிய அம்சங்களை இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் கூறுகின்றார்

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் சுவாமி விவேகானந்தர் ஆகியோர் காட்டிய ஆத்மீக வழியில் நின்று தமது செயற்பாடுகளை ஸ்ரீ இராமகிருஷ்ணாலயத்தில் மேற்கொண்டுவரும் திரு. ராஜா மகேந்திரசிங்கம் சுவாமியின் மீது கொண்ட பக்தியின் வெளிப்பாடாக இந்நூலை ஆக்கியுள்ளார் இவ்வருடம் நிகழும் சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வருகையின் நூற்றாண்டு விழாவின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் இந்நூல் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. ஆத்மீகத் தலைவரொருவரை யாழ்ப்பாண மக்கள் போற்றி வரவேற்ற பண்பு இந்நூலில் கூறப்பட்டுள்ளது. சுவாமியின் அன்பர்களினதும் ஆசிரியரினதும் இம்முயற்சிக்கு இறைவனின் திருவருளும் குருநாதரின் திருவருளும் பொலிவதாகுக.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" (குறள் 505)

ப. கோபாலகிருஷ்ண ஐயர்

இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
09-01-1997.

தேசிய ... பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



# சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வருகையும் மறுமலர்ச்சியும்

## ஸ்ரீ ராமகிருஸ்ண பரமஹம்ஸரின் செய்தியே சிகாகோ சர்வமத மகாசபையில் முழங்கியது

1893 செப்டெம்பர் 11ம் நாள் சிகாகோவில் ஆரம்பமாகிய சர்வமத மகாசபையின் வெற்றிக்கு வித்திட்டு அதனைப் பூரணப் படுத்திய பெருமை ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரையே சாரும். அவரின் நாவிலிருந்து சரஸ்வதியே தாண்டவமாடினாள். குரு தேவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமகம்ஸர் அனுபவரீதியாகக் கண்ட றிந்த மதங்கள் சார்பான கோட்பாடுகளே அப்பெருமன்றில் முன் வைக்கப்பட்டன. தனது சமயம் மட்டும் தனித்துப் பிழைத்திருக்க பிற சமயங்கள் அழிந்து விடுமென பகற்கனவு காணும் மத வெறி யர்களுக்கு தனது மனப்பூர்வமான இரக்கத்தைத் தெரிவித்துக் கொண்டதோடுமட்டுமல்லாது மதங்களுக்கிடையே சமரசமும், அமைதியும் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை 1893 செப்டெம்பர் 27ம் திகதி நிகழ்த்திய தனது நிறைவுநாள் உரை யில் தெளிவாக விளம்பியுள்ளார். ஒவ்வொரு மதமும் தன்மதமே பெரிது மற்றையவர்களின் மதம் சிறிது என்று கருதுவதனால் தான் மதங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகளும் பூசல்களும் கஷ்டங்களும் ஏற்பட்டுள்ளன என்று கூறி ஒவ்வொரு மதத்தினரும் தம்முடைய இச்சிறிய வேலிகளைத் தகர்த்தெறிந்து ஒன்றாக

வேண்டும் என்ற கருத்துக்கள் 1893 செப்டெம்பர் 15ம் நாள் அவரால் முன் வைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது உலகமதங்களுக்கெல்லாம் தாயான மதத்தின் பிரதிநிதியாகத் தாமே நின்றுகொண்டு மதப் பூசல்களை ஒழிக்க அமெரிக்கர் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும் ஒரு நிலையையும் இங்கு அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஸ்ரீ ராமகிருஸ்ண பரமகம்ஸர் இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளினூடாகவும், கிறிஸ்தவ, இஸ்லாம் போன்ற மதங்களினூடாகவும் சென்று கடவுளை அடைந்து சாதனை படைத்தார். வெவ்வேறு மதங்கள் ஒரே இறைவனையடையும் வெவ்வேறு பாதைகளே என்பதை அனுபவ ரீதியாகக் கண்டறிந்திருந்தார். சிகாகோ பெருமன்றில் ஸ்ரீ ராமகிருஸ்ண பரமகம்ஸரின் சர்வமத சமரசக் கொள்கைகளே எதிரொலித்தன. சுவாமி விவேகானந்தரின் முதல் நாள் உரையில் உலக மக்கள் மீது அவர் பேதமறக்காட்டிய அன்பும், இந்து மதத்தின் பழமையும், பெருமையும், சீரிய சிந்தனைகளும் வெளிப்படையாயிற்று. "அமெரிக்க நாட்டு சகோதரிகளே, சகோதரர்களே" என்று அவர் விளித்தபொழுது சிகாகோ பெருமன்றமே உணர்வற்று ஆர்ப்பரித்தது. சொல்லளவில் மட்டும் அவர் அந்த அன்பைச் செலுத்தினாரில்லை. எல்லா ஜீவனிலும் தன்னையே கண்ட சகோதரத்துவ உணர்வே இவ்வெளிப்பாடாகும். அவர் இவ்வுரையில் சனாதன தர்மமாகிய இந்து மதத்தின் இரு பெரிய சமரத்துவ பண்புகளைக் கூறியது மட்டுமல்லாது அந்த மதத்திற்கு உரியவன் தான் என்று பெருமைப்பட்டுக் கொள்வதிலிருந்து இந்து மதத்தின் சீரிய சிந்தனைகளை, பெருமைகளை உலக மக்கள் உணரும்படி செய்தார். "பிற சமயக் கொள்கைகளை வெறுக்காது மதித்தல் அவற்றை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்திற்குப் புகட்டிய சமயத்துக்குரியவன் என்பது குறித்து நான் பெருமையடைகின்றேன். எதையும் வெறுக்காது மதிக்க வேண்டும் என்கின்ற கொள்கைகளை நாங்கள் நம்புவதோடு எல்லாச் சமயங்களும் உண்மையே என்று நாங்கள் ஒப்புக் கொள்ளுகின்றோம்"... (முதல் பிரசங்கத்தின் ஒரு பகுதி - செப். 11 - 1893)

..........ஒருவரையும் குறை கூற வேண்டாம். ஏனெனில் எல்லாக் கொள்கைகளும் சம்பிரதாயங்களும் தம்முள் ஏதோ சிறிது நன்மையையும் வைத்துக் கொண்டுள்ளன. மதம் என்பது வெறும் வார்த்தையன்று. பேரும் சம்பிரதாயங்களும் அல்ல. ஆனால் அவை ஆன்ம அனுபவமே என்பதை உங்கள் வாழ்க்கையில் நிதர்சனமாகக் காட்டுங்கள்... சமய வாழ்க்கையைக் கைக்கொண்டு நீயே மெய்ப்

பொருளைக் காண்பாயாக என்பதே ஸ்ரீ ராமகிருஷ்ணர் நவீன உலகுக்கு கொண்டு வந்த செய்தியென்று சுவாமி விவேகானந்தர் விளம்புவதிலிருந்து மதங்களின் ஒரே நோக்கை அறியக் கூடியதாக உள்ளது.

## சிகாகோ வெற்றி வீரனாக நாடு திரும்பும் வழியில் இலங்கையில் சுவாமி விவேகானந்தர்.

சிகாகோ சர்வமத பெருமன்ற வாயிலாகவும் வேறு பல பிரசங்கங்களின் மூலமாகவும் இந்து மதத்தின் சீரிய சிந்தனை களை உலகறிய வைத்து நாடு திரும்பிய வீரத்துறவி விவேகானந் தரை இலங்கை வாழ் சைவப் பெருமக்கள் நன்றியோடு வரவேற் றதன் மூலம் நவீன இந்துமத வரலாற்றில் ஒரு முக்கிய இடத் தைப் பெற்று விட்டார்கள் என்றே கூற வேண்டும் 1897ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் நாள் தமது ஆங்கிலச் சீடர்களுடன் கொழும் புத் துறைமுகத்தில் வந்திறங்கிய சுவாமிகளை அங்கு திரண்டி ருந்த மக்கள் கூட்டம் இடி முழக்கம் செய்து வரவேற்பளித்தது. அரசியல் மேதை ராமநாதன் அருணாசலம் அவர்களுக்கு முன் னோடியான இலங்கைத் தமிழர் பொன்னம்பலம் குமாரசுவாமி வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தாரென்பது இங்கு குறிப் பிடத்தக்கது. சுவாமிஜியை கொழும்பில் வரவேற்க அவரது சகோதரத் துறவி சுவாமி நிரஞ்ஜனானந்தரும் இங்கு வந்திருந் தார். கொழும்பு விழாவிற்குப் பின்னர் கண்டி, மாத்தளை வழி யாக அநுராதபுரம் வந்து சேர்ந்தார்." ... அநுராதபுரத்தில் சுவாமிஜி பேசியது தமிழுடன், சிங்களத்திலும் மொழிபெயர்க்கப் பட்டது. பௌத்தர்கள் சிலர் சொற்பொழிவுகளினிடையே இடை யூறு விளைவிக்கும் வகையில் பலவித ஒலிகளை எழுப்பினர். தமி ழர் சிங்களவர்களினிடையே மோதல் உருவாகும் போலிருந்தது. சுவாமிஜி தமிழர்களிடையே கட்டுப்பாட்டை நிலைநிறுத்தி அமை தியை நிலைநாட்டினார். பின்பு அங்கிருந்த பௌத்தர்கள் வெட் கமுறும் வண்ணம் பகவான் புத்தரைப்பற்றி மிக உயர்வாக உரை யாற்றினார்" (நூற்றாண்டு விழாக்காணும் சுவாமி விவே கானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள் பெ. சு, மணி. பக்கம் 207)

## யாழ்ப்பாணத்தில் சுவாமி விவேகானந்தர்

அநுராதபுரத்தில் இருந்து சுவாமி விவேகானந்தர் யாழ்ப் பாணத்திற்கு குதிரை பூட்டிய கோச் வண்டியில் சுவாமி நிரஞ்ஜ னானந்தர், சேவியர் தம்பதிகள், குட்வின், கரிசன் சகிதம் மிக வும் படுமோசமான பாதைகளினூடு மிக்க சிரமத்துடன் பயணம்

செய்து 1897 ஜனவரி 24ம் திகதி காலை 11.30 மணியளவில் வந்து சேர்ந்தார். சுவாமிஜியை வரவேற்பதற்காக காத்து நின்ற மக்கள் காலை 9.00 மணி வரையும் அவரின் வரவு தாமதமடைந்ததினால், ஆவல் தாங்க முடியாத நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து 5 மைல் தூரம் முன்னேறிச் சென்று தென்மராட்சிப் பகுதியில் சுவாமிஜியை எதிர் கொண்டனர். அங்கிருந்து சுவாமிஜியும் அவருடன் வந்தவர்களும் வண்டில் ஊர்வலத்துடன் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர். முதல் வண்டிலில் (Landau) சுவாமி விவேகானந்தருடன், சுவாமி நிரஞ்ஜனானந்தரும் சுவாமிஜியை யாழ்ப்பாணத்தில் வரவேற்க அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் அட்வகேட் திரு சி. நாகலிங்கமும் அமர்ந்துவர, ஏனையோர் 20 வண்டில்களில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

அன்றைய தினம் இரவு சுவாமி விவேகானந்தருக்கு அதி உன்னதமான வரவேற்பு விழாவொன்றை யாழ். இந்துக் கல்லூரியில் வரவேற்புக் குழுவினர் ஒழுங்கு செய்திருந்தனர். இதற்கென இக்கல்லூரியின் பிரதான வாசலுக்கு முன்பாக மிகவும் பெரிய பந்தல் ஒன்று அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் பெரிய கடை (Grand Bazaar) யில் இருந்து சுவாமி விவேகானந்தரும் அவருடன் வந்தவர்களும் இரு வண்டில்களில் ஊர்வலமாக அழைத்து வரப்பட ஏனையோர் கால் நடையாக ஊர்வலத்தில் பங்கு பற்றினர். தீவெட்டி வெளிச்சத்துடன் இரவு 8.30 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் யாழ். இந்துக் கல்லூரியைச் சென்றடைய இரவு 10.00 மணியாகியது. யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதி மக்கள் கூட்டத்தின் நெரிசலினால் வேறு எந்த வாகனங்களினதும் வண்டில்களினதும் போக்குவரத்துக்கு பாவிக்க முடியாத நிலையில் இருந்தது. தெருவின் இரு பக்கங்களிலும் நூற்றுக்கும் அதிகமான வாழைகள் நாட்டப்பட்டு மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வீடுகளுக்கு முன்பாக நிறைகுடம் வைக்கப்பட்டு, குத்துவிளக்கேற்றப்பட்டு, சுவாமிஜியைப் பக்திப் பரவசத்துடன் மலர்மாலை அணிவித்து மக்கள் வரவேற்றார்கள். இவ்வழியாக வரும் பொழுது கதிரேசன் கோயிலையும், சிவன் கோயிலையும் சுவாமிஜி தரிசித்ததாக அறிய முடிகின்றது. இவ் வூர்வலத்தில் 15000 க்கும் மேற்பட்ட மக்கள் பங்கு பற்றியதாக குறிப்பேடுகள் கூறுகின்றன.

சுவாமி விவேகானந்தர் யாழ். இந்துக்கல்லூரியைச் சென்றடைய 4 மணித்தியாலங்களுக்கு முன்பாகவே அவருக்கு அளிக்கப்படும் வரவேற்பைக் காணவும், தரிசிக்கவும் கூடிய மக்களினால் பந்தல் நிறைந்திருந்தது. யாழ் இந்துக் கல்லூரி பிரதான வாச

வில் திருவாங்கூர் (Travancore) இளைப்பாறிய பிரதம நீதிபதி திரு. எஸ் செல்லப்பாபிள்ளை சுவாமி விவேகானந்தருக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்றார். அதன் பின்னர் வரவேற்புக் குழு செயலாளர் திரு. அ. சபாபதி அவர்களினால் வரவேற்புரை வாசிக்கப்பட்டது சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தின் பெருமைகளை உலகறிய வைத்தமையை யாழ்ப்பாணத்தில் வாழும் சைவப் பெருமக்கள் நன்றிப் பெருக்குடன் நோக்கினார்கள். இவ் வரவேற்புரையில் இந் நன்றி உணர்வு இழையோடிருப்பதைக் காணலாம். இதன் ஒரு பகுதி வருமாறு:-

'எமது சமய உண்மைகளைத் தங்கள் சுயநலமற்ற சேவை மூலம் பரப்பி வருவதற்கும், சர்வசமய மாநாட்டில் வேதங்களின் உட்பொருளை விளக்கியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். செய்வீகத் தன்மை வாய்ந்த இந்திய தத்துவ சாஸ்திரத்தை அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களில் பரப்பி மேலைத் தேசங்களுக்கும் கீழைத் தேசங்களுக்கு மிடையே நல்லுறவை ஏற்படுத்தியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம், சமய உண்மைகளில் நம்பிக்கை குறைந்து உலோகாயதக் கொள்கைகள் பரவி வரும் இக்காலத்தில் நமது பழம் பெரும் சமய உண்மைகளைப் பிரச்சாரம் செய்வதற்குத் தாங்கள் அரம்பித்திருக்கும் இயக்கத்திற்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்''

வரவேற்புரைக்கு பதிலளிக்கு முகமாக சுவாமி விவேகானந்தர் ஒரு மணி நேரம் வரை அன்றைய தினம் பேசினார்.

அடுத்த நாள் (25 01.1897) இரவு 7.00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் வேதாந்தம் பற்றிய சொற்பொழிவொன்றை 1 மணி 40 வினாடிகள் நேரம் வரை சுவாமி விவேகானந்தர் ஆற்றினார். அவரால் வேதாந்தம் பற்றி ஆற்றிய சொற்பொழிவுகளில் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய இச் சொற்பொழிவே சிறந்ததாக வர்ணிக்கப்படுகின்றது இச் சொற்பொழிவில் வேதங்கள்— அதன் இரு பெரும் பிரிவுகள் கர்மகாண்டம். ஞானகாண்டம், கடவுள், ஆத்மா போன்றவற்றுக்கு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவர்களும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் சுவாமிஜி விளக்கமளித்துள்ளார்

இச் சொற்பொழிவில் ஜாதி பற்றிக் குறிப்பிடும் பொழுது ''நமது மதம் அனைவருக்கும் இடம் கொடுக்கின்றது; எவரையும் நிராகரிப்பதில்லை. நமது ஜாதி முறை மதத்துடன், சேர்ந்த

தாகத் தோன்றினாலும் உண்மையில் அது மதத்துடன் சம்பந்தப்பட்டதல்ல. ஜாதிகள் நம் சமூகத்தைக் காப்பாற்ற ஏற்பட்டவை அவை அவசியமில்லாமல் போகும் பொழுது ஜாதிகளும் தாமாகவே மறைந்து விடும்'' என்றும், தானங்களில் எல்லாம் சிறந்தது ஆன்மீக அறிவு புகட்டுதலே என்றும், பொறாமையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ''நெடுங்காலமாகவே நாம் பொறாமையில் மூழ்கிக்கிடக்கின்றோம்; இவனுக்கு ஏன் அதிக மரியாதை கிடைக்கிறது? நான் ஏன் அதைப் பெறக் கூடாது? என்ற இவ் விதமான பொறாமை நம் மனத்தில் நிறைந்திருக்கிறது கடவுள் ஆராதனை நடக்கும் இடங்களில் கூட நாம் மற்றவர்களுக்கு முன் நிற்க விரும்புகின்றோம். இதைவிடக் கேவலமான அடிமை உணர்ச்சி வேறு என்ன இருக்க முடியும் இப் பொறாமையை அகற்ற வேண்டும். இவ்வடிமைத்தனம் தான் இந்தியாவின் பெரும் பாவம். எல்லோரும் அதிகாரம் செய்ய விரும்புகின்றார்கள். ஒருவரும் சேவை செய்ய விரும்புவதில்லை. பழங்காலத்து பிரமச்சரிய முறை போய் விட்டதனால் இவ்விதம் நேர்ந்திருக்கின்றது. முதலில் கீழ்படியத் தெரிந்து கொள்ளுங்கள் அதற்கு மேல் அதிகாரம் தானே வரும். முதலில் தொண்டர்களாயிருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அதன் மூலம் தலைவராகும் தகுதி பெறுவீர்கள். பொறாமையை மனத்திலிருந்து அகற்றினால் மகத்தான காரியங்களைச் செய்யக் கூடிய சக்தி உங்களுக்கு உண்டாகும்'' என்று கூறியுள்ளார். அவரின் இச் சொற்பொழிவை ஏறக்குறைய 4000 மக்கள் வரை கேட்டு மகிழ்ந்தார்கள்.

விவேகானந்தர் யாழ்ப்பாணத்துக்கு வந்த பொழுது அவரை யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் தரிசித்ததை ஏடுகள் எடுத்தியம்புகின்றன. அப்பொழுது அவர் இளைஞனாக இருந்தார். பின்னாட்களில் யோகர் சுவாமிகள் தன் அன்பர்களிடம் உரையாடும் பொழுது ''விவேகானந்தர் மேடையில் இரு பக்கங்களிடையேயும் சிங்கக்குட்டி போல் உலாவிக் கொண்டு பேசினார் எனவும், அவர் பேசினார் என்பதிலும் பார்க்க சிங்கம் போல் கர்சித்தார் என்பதே சரி'' எனவும் கூறி மகிழ்வார். அவர் யாழ். இந்துக் கல்லூரியில் பேசிய முதல் வசனத்தைப் பல தடவைகள் அன்பர்களுக்கு கூறியுமிருக்கின்றார். ''விடயம் பெரிது நேரமோ குறுகியது'' (The subject is very large and the time is short) என்பதே அவ் வாசகமாகும்.

சுவாமி விவேகானந்தரின் யாழ். இந்துக் கல்லூரிப் பிரசங்கத்துடன் அவரின் யாழ்ப்பாண வருகை இனிது நிறைவுற்றது. விவேகானந்தரும் அவருடன் கூட வந்தவர்களும் நீராவிப் படகு ஒன்றின் மூலம் 1897 ஜனவரி 26ம் திகதி பி.ப 3.00 மணியளவில் தென் இந்திய பாம்பன் நகரைச் சென்றடைந்தனர்.

## இலங்கை அனுபவம் பற்றி சுவாமி விவேகானந்தர்

இங்கு அத்வைதமும், வீர சைவமும் அனுஷ்டிக்கப் படுகின்றன. இந்து என்ற பெயருக்குப் பதில் சைவம் எனக் கூற வேண்டும். ஸ்ரீ சைதன்ய தேவர் வங்காளத்திலே பரவச் செய்த இறைவனின் திவ்ய நாம சங்கீர்த்தனமும், நடனமும் ஆதியிலே தென்னாட்டிலே தமிழர்களிடையே பிறந்தன இலங்கையிலே வழங்கும் தமிழ் சுத்தமான தமிழாகும். மதமும் கலப்பற்ற தமிழ் மதமேயாகும். பல்லாயிரக் கணக்கான மக்கள் பரவசமாய் ஒருங்கே மறைநூல்கள் ஓதுதலும், சிவனைப் பரவிப் பாடுதலும், ஆயிரக் கணக்கான தாள வாத்தியங்களின் முழக்கமும், இனிய ஓசையும், சிறந்த அடியாரான அனுமனை ஒத்த தோற்றமும், சிவந்த கண்களும், உயர்ந்த ஆகிருதியும் கொண்ட தமிழர்கள் உடல் முழுவதும் நீறுபூசி கழுத்திலே உருத்திராக்க மாலை அணிந்து மெய் மறந்து ஆடுவதும், ஆகிய இவற்றை நேரில் பார்க்காமல் ஒருவரால் புரிந்து கொள்ள முடியாது

## சுவாமி விவேகானந்தரின் வருகையினால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட தாக்கமும் மறுமலர்ச்சியும்

சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வருகையும், சொற்பொழிவும் பலரின் உள்ளங்களில் ஆழமாக வேரூன்றி பல மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கின. யாழ். இந்துக் கல்லூரி சொற்பொழிவினால் கவரப்பட்ட பலருள் ஒருவரான அக் கல்லூரி ஆசிரியராகவும், விடுதிப் பொறுப்பாசிரியராகவும் (Warden) இருந்த திரு நாகமுத்து, சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகளுக்கு அமைவான ஒரு பாடசாலையாக வைத்தீஸ்வரா வித்தியாலயத்தை 1913ல் ஸ்தாபித்தார்.

மனிதனுள் ஏற்கனவே உள்ள ஆற்றல்களை வெளிக் கொணரத் தக்க வகையில் கல்வி அமைய வேண்டும்; பழைய குருகுல அமைப்பிலான கல்வி முறையே மேற்படி இலக்கை அடைய வழிவகுக்கும் என்பதும், ஏற்படக் கூடிய தீங்குகளில் இருந்து நிவாரணம் அளிக்கும் என்பதுவுமே விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகளின் முக்கிய அம்சங்களாகும் ஒழுக்கத்தைத் தரும் கல்வி, மனத்தின் வலிமையை அதிகரிக்கக்கூடிய கல்வி, அறிவை விரிவாக்கும் கல்வி, பிறரில் தங்கியிராது தனது சுயமுயற்சியில் இயங்கக் கூடிய ஆற்றலை வளர்க்கும் கல்வியே இந்நாட்டுக்குத் தேவை

என்று கூறினார். தொழில் கல்வியினால் நன்மை பெறலாம் என்று கூறிய விவேகானந்தர் தாய்மொழிக் கல்வியுடன் ஆங்கில மொழியையும், மேல்நாட்டு பௌதீகசாஸ்திரத்தையும் கற்க வேண்டும் என்றார். ஆத்மீகத்தை அடிப்படையாகக் கொண்டு இவரின் இச்சிந்தனைகள் விளங்கின.

விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகளினால் கவரப்பட்ட திரு. நாகமுத்துவினால் ஸ்தாபிக்கப்பட்ட வைத்தீஸ்வரா வித்தியாலயம் 1917ல் இராமகிருஷ்ண மிசனிடம் முறையாக கையளிக்கப்பட்டது அக்காலகட்டத்தில் இராமகிருஷ்ண மிசன் கிளைகள் இலங்கையில் ஸ்தாபிக்கப்படவில்லை என்பதினால் சென்னை இராமகிருஷ்ண மடத்தின் தலைவராக இருந்த சுவாமி சர்வானந்தா இக் கல்லூரியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். வைத்தீஸ்வரா வித்தியாலயமே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட இராமகிருஷ்ண மிசனின் முதல் கலைக்கூடமாகும், சுவாமி சர்வானந்தா இலங்கைக்குப் பல தடவைகள் விஜயம் செய்து கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார் நல்லூரில் இருந்த இந்துக் கல்லூரியும், மானிப்பாய் இந்துக் கல்லூரியும் சுவாமி சர்வானந்தா சொற்பொழிவாற்றிய இடங்களாகப் பெருமை பெற்று விளங்குகின்றன. இந்நாடு அளித்த முதல் இராமகிருஷ்ண சங்கத்துறவி சுவாமி விபுலானந்தர் 1926ல் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் முகாமையாளராகப் பதவியேற்ற பின்னர் இராமகிருஷ்ண மிசனின் கல்விப் பணி யாழ்ப்பாணத்தில் மேலும் விரிவடைந்தது சுவாமி அவினாசானந்தா அவருக்குத் துணையாக இயங்கியமையும் குறிப்பிடத்தக்கது. சுவாமி விபுலானந்தர் வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியில் ஆச்சிரமம் அமைத்து தங்கியிருந்தார்: 06-06-1926ல் மாணவர் நிறைவாழ்வு இல்லம் ஒன்று இங்கு அவரால் ஸ்தாபிக்கப்பட்டது, இக்காலப் பகுதியில் இராமகிருஷ்ண மிசன் பணி மட்டக்களப்பில் துரித வளர்ச்சியடைந்தது இதனால் 1929 – நவம்பர் மாதமளவில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய மாணவர் நிறைவாழ்வு இல்லம் மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டது கல்லடி உப்போடையில் அமைந்துள்ள இவ்வில்லம் 1976ல் அதன் பொன்விழாவைக் கொண்டாடியது. இவ்வில்லத்தில் பயின்ற பலர் பட்டதாரிகளாகவும், பேராசிரியர்களாகவும் விளங்குகின்றார்கள் இவ்வில்லத்தில் பயின்றவர்கள் நிறைவாழ்வு வாழ்ந்து மற்றவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கதும், பெருமை தரக்கூடிய விடயமுமாகும்.

“நமது நாட்டில் இராமகிருஷ்ண – விவேகானந்த வேதாந்தம் ஓரளவு பரவியுள்ளது. பரவுகின்றது, இந்நாட்டு மறுமலர்ச்சியில் ஒரு புது பெருமையும், உத்வேகத்தையும், உணர்வையும்

இராமகிருஷ்ண தத்துவம் அளித்துள்ளது இத்தத்துவம் இந் நாட்டில் கண்ட மறுமலர்ச்சி ஆத்மீக – சன்மார்க்க உடன்பாட்டு மறுமலர்ச்சியாகும்,

வட இலங்கையில் 4 - கல்லூரிகளும், ஊவா மாகாணத் தில் 1 கல்லூரியும், கிழக்கிலங்கையில் 30 தலை சிறந்த கல்லூரி களும் நிறுவப்பட்டன'' (பேராசிரியர் ப சந்திரசேகரம், இராம கிருஷ்ண பரமஹம்ஸ தத்துவம் – பக்கம் 6–7 இராமகிருஷ்ணாலய வெளியீடு)

## மானிப்பாயில் சுவாமி விவேகானந்தரின் பெயரில் ஒரு வித்தியாலயம்

விவேகானந்தா வித்தியாலயம் என அழைக்கப்படும் 92 வருடங்கள் பழமை வாய்ந்த வித்தியாலயமொன்றை மானிப் பாய் லோட்டன் வீதியில், வேலக்கைப் பிள்ளையார் கோவில் வீதியில் காணக் கூடியதாய் உள்ளது. சுவாமி விவேகானந்தரின் மகா சமாதிக்குப் பின்னர் இவ்வித்தியாலயம் 04-09-1904ல் ஸ்தாபிக்கப்பட்டதை இவ்வித்தியாலயத்தின் வரலாறுகள் எடுத் தியம்புகின்றன. இவ்வித்தியாலயத்தை சுவாமி ஞானானந்தர் திறந்து வைத்தார், விவேகானந்தரின் யாழ். வருகைக்கு 7 ஆண்டு களுக்குப் பின் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வித்தியாலயம் 4½ பரப்பு 17½ குழியில் இயங்கி வருகின்றது,

## விவேகானந்த சபை

விவேகானந்தரின் மகாசமாதிக்குப் பின்னர் கொழும்பு, மட் டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மானிப் பாய் போன்ற இடங்களில் விவேகானந்த சபைகள் உருவாகின.

சுவாமி சர்வானந்தாவின் சொற்பொழிவுகளினால் கவரப் பட்ட பண்டிதர் மயில்வாகனம் (சுவாமி விபுலானந்தர் – துறவுத் தீட்சை பெறுவதற்கு முன்னர்) தான் வாழ்ந்த ஆனைப்பந்தி இல் லத்தில் விவேகானந்த சபையை உருவாக்கினார்.

குறிப்பு 1) யாழ்ப்பாணத்திலும், மானிப்பாயிலும் உருவாக்கப் பட்ட சபைகள் அவற்றின் செயற்பாடுகளை முன்னெடுத் துச் செல்ல எவருமின்றி ஸ்தம்பிதம் அடைந்து மறைந்து விட்ட நிலையும் வருந்தத்தக்கது.

2) இராமகிருஷ்ண மிசனால் நிர்வகிக்கப்பட்ட கல்லூரி களை 1960ல் அரசு பொறுப்பேற்றுக் கொண்டதும். இக்

கல்லூரிகளூடாக இராமகிருஷ்ண மிசன் நடாத்திய கல்விப் பணி முடிவுக்கு வந்தது.

3) யாழ்ப்பாணத்தில் இராமகிருஷ்ண மிசனின் நேரடிக் கிளைகளோ மடங்களோ, மாணவர் நிறைவாழ்வு இல்லங்களோ இல்லாதது பெருங்குறையாக உள்ளது.

## பேராசிரியர் க. கைலாசபதி ஆய்வுரை

''நாவலர் போன்ற மறுமலர்ச்சியாளர்கள் இந்து சமய உணர்வை செழிக்கச் செய்யப் போராடினார்கள் கிறிஸ்தவ சமயத்தின் மதமாற்றத்திற்கான எதிர்ப்பை உருவாக்குவதில் தற்காப்பு உத்தியைக் கையாண்டனர். கிறிஸ்தவம் தகுதியற்றது என்று நிறுவப் போராடினர். ஆனால் விவேகானந்தரின் அணுகுமுறை வித்தியாசமானது - தனது குருநாதரின் போதனைகளுக்கேற்ப அனைத்து மதங்களும் சமமானவைகளே என்பதை வலியுறுத்தினார். இதனால் இந்து மதம் பிறமதங்களுக்குத் தாழ்வானது அன்று என்பது விளக்குமுற்றது. அதே சமயத்தில் இந்து சமயம் உலகம் தழுவியது என்பதும் ஐயத்துக்கிடமின்றித் தெளிவைக்கப்பட்டது.

யாழ்ப்பாண இந்துக்களில் பெரும்பான்மையினர் சைவர்கள் சைவசமயப் பற்று மிகுந்தவர்கள். சங்கர வேதாந்தின் மாயாவாதத்தைத் தகர்ப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்கள். ஆனால் மெல்ல மெல்ல வேதாந்தத்தை ஒப்புக் கொள்ளாது போனாலும் பொறுத்துக் கொள்ளக் கொடங்கினர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் சுவாமி விவேகானந்தரின் போதனைகளும் இராமகிருஷ்ண இயக்கத்தின் செய்தியும் இலங்கைத் தமிழ் இந்துக்களை வேதாந்தத்தை ஒப்புக் கொள்ளச் செய்யாவிட்டாலும் பெரும்பாலோரின் குறுகிய நோக்கையும் கொள்கைப் பிடிவாதத்தையும் தளரச் செய்தது. ("The impact of Swamy Vivekananda on Hinduism in Sri Lanka" - Prof K. Kailasapathy - Golden Jubilee of the Ramakrishna Mission Sri Lanka Center).

## கொழும்பில் இராமகிருஷ்ண மிசன்

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் நேரடிச் சீடர்களாகிய சுவாமி விவேகானந்தரும், சுவாமி சிரத்தானந்தரும் இலங்கையில் கொழும்பு, கண்டி, மாத்தளை, அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் வந்து சென்ற பின்னர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்

ணரின் ஏனைய நேரடிச் சீடர்களுள் பின்வருவோர் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

| | |
|---|---|
| சுவாமி சிவானந்தா | 1897 |
| சுவாமி துரியானந்தா | 1899 |
| சுவாமி திரிகுணாதீதானந்தா | 1903 |
| சுவாமி அபேதானந்தா | 1906 |
| சுவாமி இராமகிருஷ்ணானந்தா | 1906 |
| சுவாமி விஞ்ஞானானந்தா | 1934 |

கொழும்பில் இராமகிருஷ்ண மிஷன் 1930ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சுவாமி சர்வானந்தாவினால் 22-10-1930ல் வெள்ளவத்தையில் இல 49, ஃபேரர்ஸ் அவெனியூவில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வாச்சிரமம் 1932ல் IBC வீதியில் இல 49 இல்லத்துக்கு மாற்றப்பட்டு 1935ல் தற்போது மிஷன் இயங்கும் இடத்துக்கு மாற்றப்பட்டது (இல 40, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை)

மிஷன் சமயப் பணியுடன் சமூகப் பணியையும் ஆடம்பரமற்ற முறையில் செய்து வருகின்றது. 1952ல் ஞாயிறு பாடசாலை (Sunday School) ஆரம்பிக்கப்பட்டது. 1995-1996 காலப்பகுதியில் 779 மாணவர்கள் இப் பாடசாலையில் சமயக் கல்வி, நன்னெறிப் போதனைகள், சங்கீதம், பண்ணிசை போன்றவற்றைப் பயின்று முன்னேறி வருவது குறிப்பிடத்தக்கது.

''ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பெயரில் அன்ன சத்திரத்தை அல்லது தரும சத்திரத்தை நிறுவி ஏழைகளுக்கு அனுதினமும் இரு வேளையும் அன்னமளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய உத்தேசித்திருக்கின்றேன்''

என்று அன்னதானப் பணியின் அவசியத்தைக் கூறினார் விவேகானந்தர். இதனை நடைமுறைப் படுத்தும் வகையில் மிஷன் 1952ல் கதிர்காமத்தில் மடம் ஒன்றை நிறுவி அன்னதானப் பணிகளைச் செவ்வனே செய்து வந்தது. எனினும் 1976ல் இம் மடத்தை அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டது. இம்மடத்தின் உதவியாளராக 20 வருடங்கள் உழைத்தவர் திரு. வேலுப்பிள்ளை சபாரத்தினம். இவர் யாழ் காரைநகரைச் சேர்ந்தவர். சுவாமி ஜதீஸ்வரானந்தாவிடம் தீட்சை பெற்றவர். மடம் சுவீகரிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் வந்து இராமகிருஷ்ண – விவேகானந்த வேதாந்தத்தை மக்களிடையே பரப்புவதில் மிக்க சிரத்தையுடன் உழைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராமகிருஷ்ண மிசன் தலைவர்களாக (Swami in Charge) இருந்தவர்கள்.

| | |
|---|---|
| சுவாமி கனகானந்தா | 1931 |
| சுவாமி அசங்கானந்தா | 1933 |
| சுவாமி சித்காத்மானந்தா | 1941 |
| சுவாமி அசங்கானந்தா | 1951 (மீண்டும் ஒருதடவை) |
| சுவாமி பிரேமாத்மானந்தா ★ | 1954 |
| சுவாமி சம்பிரக் ஞானந்தா | 1987 |
| சுவாமி ஜீவனானந்தா | 1990 (தற்காலிகமாக) |
| சுவாமி ஆத்மகணானந்தா | 1991 வைகாசியில் இருந்து |

★ 33 வருடங்கள் இலங்கைக் கிளையின் தலைவராக இருந்த சுவாமி பிரேமாத்மானந்தா யாழ்ப்பாணத்து ஆனைப்பந்தியைச் சேர்ந்தவர் என்பதும், யோகர் சுவாமிகளின் கட்டளையின் பெயரில் இராமகிருஷ்ண மிசனில் சேர்ந்து துறவு பூண்டவர் என்பதும் இவரது குரு இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் நேரடிச் சீடர் சுவாமி சிவானந்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கொழும்பு இராமகிருஷ்ண மிசன் தலைமைப் பதவியை ஏற்று இவர் ஆற்றிய சேவை யாழ்ப்பாணத்துக்கு மட்டுமல்லாது இலங்கை முழுவதற்குமே பெருமை தேடித் தந்துள்ளது.

இராமகிருஷ்ண மிசன் சமூக மேம்பாட்டுச் சேவை கல்விச் சேவை, மருத்துவ உதவி போன்ற சமுதாய சேவைகளைச் செய்து வருவது கண்கூடு அகதிகளுக்கு நிவாரணமளித்தல் பஞ்சத்தில் இருப்பவர்களுக்கு உணவு உடை வழங்கல் மீன் தங்கியோரின் வாழ்வு மேம்பாட்டுக்கு உழைத்தல் போன்ற இன்னோரன்ன சேவைகளைத் திறம்பட ஆற்றி வருகின்றது,

> "ஆண்டவனை எங்கே தேடுகின்றாய்? ஏழைகள் துன்பப் பட்டவர்கள். பலவீனர்கள் எல்லோரும் அந்தத் தெய்வத்தின் வடிவங்களல்லவா? ஏன் இவர்களை முதலில் ஆராதிக்கக் கூடாது? ஏழைகளையே உங்கள் தெய்வங்களாகக் கருதுங்கள் அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். அவர்களுக்கு ஊழியம் புரியுங்கள். இடைவிடாது அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். அப்பொழுது ஆண்டவன் உங்களுக்கு வழி காட்டுவார்" என்றும்
>
> "இந்துக்களிடம் அனுதாபம் இல்லாமையாலேயே சென்னையில் உள்ள ஆயிரக் கணக்கான தாழ்த்தப்பட்டோர்

> *மதம் மாறுகின்றார்கள். இது பசிக் கொடுமையால் மட்டும் ஏற்பட்டதன்று இந்துக்களின் உள்ளத்தில் உள்ள இரக்க மின்மையாலும் ஏற்பட்டது.*

என்றும் விவேகானந்தர் இடித்துரைத்தார்.

*சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளை சிரமேற் கொண்டு இராமகிருஷ்ண மிசன் பணியாற்றி வருகின்றது. தற்போதைய தலைவர் சுவாமி ஆத்மஸ்தானந்தா இக் காலப் பகுதியில் இப் பணிகளைச் சிறப்பாக விரிவாக்கி வருவதுடன், விவேகானந்தரின் சிந்தனைகளை நாடு பூராவும் பரப்புவதில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மிசனுக்கு வந்து பயன் அடையும் பக்தர்களின் எண்ணிக்கையும் பெருமளவு அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் இயங்கும் இராமகிருஷ்ணாலயத்துக்கும் பருத்தித்துறையில் இயங்கும் இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கும் ஆதரவுகளை வழங்கி இப் பணி இங்கு சிறக்க அவர் ஆற்றிவரும் பணி அளப்பரியது.*

## யாழ்ப்பாணத்தில் இராமகிருஷ்ண மிசன் பணிகளின் தாக்கம்

இந்து மதத்தின் ஆத்மீக மரபு குரு சிஸ்ய பாரம்பரியத்தின் வழி பேணப்பட்டு வருகின்றது. இந்து மதத்தின் ஆத்மீக மரபை அதிசயத்தக்க முறையில் வாழ்ந்து காட்டிய மகத்தான அவதாரம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்; 'எவன் இராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதரித்தானோ அவனே இந்த உடலில் இராமகிருஷ்ணராக அவதரித்தார் என்பதை உணர்' என்று விவேகானந்தருக்கு உறுதிப்படுத்திய அவதாரபுருடர்; அவர் ஓர் சிறந்த பரம ஞானி; கடவுளைத் தான் கண்டதோடு மட்டுமல்லாது தன் சீடர்களுக்கும் காட்டவல்ல பக்குவம் வாய்ந்த கலையாய குரு; இவர் வழி வந்த பிரதமசீடன் தான் சுவாமி விவேகானந்தர் இக் குரு-சிஸ்ய பரம்பரை அதிசயத்தக்க ஆற்றல்களையும் பெருமைகளையும் கொண்டது. இராமகிருஷ்ண மிசன், மடத்தில் சேவையாற்றிவரும் துறவிகள் இப்பரம்பரையில் வந்தவர்களே.

''எங்கெல்லாம் கொள்ளை நோய்களோ, பஞ்சமோ, பட்டினித்துன்பங்களோ, அங்கெல்லாம் சென்று அந்த பாமர மக்கள் படும் துன்பங்களைத் தவிர்க்க முயல்வீர்களாக! இந்த உன்னத

பொது நூலகம் மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்

முயற்சியில். அதிகமாகப் போனால் நீங்கள் ஒரு வேளை உயிரிழக்க நேரலாம்; நேரட்டுமே. அதனால் என்ன? புழுக்களைப் போல், அன்றாடம் பிறந்து இறந்து வீணே மறைந்தொழியும் மக்கள் உங்களைப் போல் எத்தனை எத்தனை பேர்? உலகத்திற்கு இதனால் என்ன நஷ்டம் வந்து விட்டது? என்றேனும் ஒரு நாள் நாம் இறக்கத் தான் வேண்டும். அந்த இறப்பு ஒரு உயர்ந்த குறிக்கோளுக்காக அமையட்டும்? ஒரு நல்ல குறிக்கோளுக்காக உயிர் துறப்பது மேலல்லவா?

என்று சேவைக்கு முனைப்புக் கொடுத்து அறை கூவல் விடுத்தார் விவேகானந்தர்.

இராமகிருஷ்ண மடத்து துறவிகள் சுவாமி விவேகானந்தரின் திட்டங்களை நடை முறைப்படுத்தும் உத்தமமான கருவிகள்: தன்னலமற்ற தியாகிகள்; அவர்கள் எல்லையற்ற அன்புடனும், மனிதநேயத்துடனும் ஆற்றிவரும் சேவைகள் போற்றுதற்குரியது. யாழ்ப்பாணத்தில் இராமகிருஸ்ண மிசனின் நேரடிக் கிளைகள் இல்லாது போனாலும், பருத்தித்துறையில் இயங்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண - சாரதா சேவாச்சிரமமும், திருநெல்வேலியில் இயங்கும் இராமகிருஷ்ணாலயமும், கொக்குவிலில் இயங்கிய இராமகிருஷ்ண சேவாச்சிரமமும் கொழும்பு இராமகிருஷ்ண மிசன் துறவிகளின் பணியின் தாக்கத்தால் தோற்றமெடுத்தன எனலாம் 1987ன் பின்னர் கொக்குவில் இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் பணிகள் வெகுவாக ஸ்தம்பிதமடைந்த நிலலயில் உள்ளது. பருத்தித்துறை இராமகிருஷ்ண - சாரதா சேவாச்சிரமமும், திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயமும் இராமகிருஷ்ண விவேகானந்த தத்துவம் யாழ்ப்பாணத்தில் ஓரளவு பரவ முன்னின்று உழைத்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய நூலகப் பகுதி
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண
விஜயத்தின் நூற்றாண்டை (1897-1997) முன்னிட்டு

# திருநெல்வேலி
# இராமகிருஷ்ணாலயம் ஒழுங்கு செய்த நிகழ்வுகள்

07-11-1996 யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி - இந்து மாணவர் மன்றத்துடன் இணைந்து நடாத்திய கருத்தரங்கும், முன்னோடி விழாவும்

இடம் கல்லூரி விவேகானந்தர் மண்டபம்

நிகழ்வுகள்: சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் திரைநீக்கம்
சுவாமி விவேகானந்தர் பேச்சுப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும்,
கலை நிகழ்வுகள்

15-11-1996 யாழ்/இந்து மகளிர் கல்லூரி - இந்து மன்றம், தமிழ் மன்றத்துடன் இணைந்து நடாத்திய கருத்தரங்கம்,

இடம்: கல்லூரி சிவகுருநாதர் விசாலாட்சி மண்டபம்,

நிகழ்வுகள்: பஜனை, சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படம் திரை நீக்கம், விவேகானந்தர் பேச்சுப் போட்டியும், பரிசளிப்பு வைபவமும் கருத்தரங்கும்,

01-01-1997 கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஆதரவுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மிகவும் கஷ்டப்பட்ட மக்களுக்கும் மாணவர்களுக்கும் நிவாரணமும், பிரசாதமும் வழங்கல்

இடம்: இராமகிருஷ்ணாலய மண்டபம்
திருநெல்வேலி

நிகழ்வுகள்: பஜனை, பூசை, சொற்பொழிவுகள், நிவாரணம் வழங்கல்

15-01-1997 யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி - இந்து மாணவர் மன்றத்துடன் இணைந்து சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு தினவிழா

இடம்: கல்லூரி மண்டபம்

நிகழ்வுகள்: சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்பட திரைநீக்கம், பஜனை நினைவுப் பேருரை, சிறப்புச் சொற்பொழிவுகள் ''சங்கமம்''- நாடகம், பேச்சுப்போட்டியில் வென்ற மாணவர்களுக்குப் பரிசில்கள்.

18-01-1997 யாழ். மாநகர மன்ற சைவ சமய விவகாரக் குழுவினருடன் இணைந்து சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாண விஜய நூற்றாண்டு கட்டுரைப் போட்டி.

24-01-1997 யாழ். விஜய நூற்றாண்டு தினம்

இடம்: இராமகிருஷ்ணாலயம்

நிகழ்வுகள்: விசேட பூசை வழிபாடுகள் சுவாமி விவேகானந்தர் யாழ்- விஜய நூற்றாண்டு ஞாபகார்த்த படிப்பகம் திறந்து வைத்தல்

சுவாமி விவேகானந்தரின் யாழ் வருகையும் மறுமலர்ச்சியும் மலர் வெளியீடு

பிரசாதம்

25-01-1997 யாழ். மாநகர மன்ற சைவ சமய விவகாரக் குழுவினருடன் இணைந்து நடாத்தும் விழா

இடம்: நாவலர் கலாச்சார மண்டபம் யாழ்ப்பாணம்

நிகழ்வுகள்: சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் திரைநீக்கம், நினைவுப்பேருரை, சிறப்பு சொற்பொழிவுகள், பஜனை, தெய்வீக இசையரங்கு, நாடகம்- ''சங்கமம்.